முகாமைத்துவ மதிப்பாய்வு

# ஹிக்கடுவ தேசிய கடல் பூங்கா

காலி மாவட்டம், தென் மாகாணம்

## இது எதைப் பாதுகாக்கின்றது?



இலங்கையின் மிகவும் முக்கியமான சூழற்தொகுதிகளில் ஒன்றான கரையோரத்தில் வளரும் முருகைக்கல் சூழற்தொகுதியை இந்த இயற்கைப் பூங்கா பாதுகாக்கின்றது. முருகைக்கல் பூந்தோட்டங்கள், கடற் புற்கள் மற்றும் கடற்கரைகளை இயற்கையாகக் கொண்ட கரையோரத்தை அண்மித்த ஆழம் குறைந்த வாவித் தொகுதியாக இது அமைந்துள்ளது.

60 இற்கும் மேற்பட்ட வன்மையான மற்றும் மென்மையான முருகைக்கல் இனங்கள், நூற்றுக் கணக்கான முருகைக் கல் மீன் இனங்கள், கடல் ஆமைகள் மற்றும் கறுப்பு முனை முருகைக்கல் சுறா அத்துடன் மோரே ஈல் மீன்கள் போன்ற முருகைக் கற்களை அண்டி வாழும் உயிரினங்களின் வாழிடமாக இந்தப் பூங்கா அமைந்துள்ளது. இங்கு இடம்பெறும் பாரம்பரியமான கரையோர மீன்பிடி மற்றும் புகழ்பூத்த சுற்றுலாத் தலமாக அமைந்துள்ளமை என்பவற்றின் காரணமாக இந்த தேசிய இயற்கைப் பூங்கா கலாச்சார மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளது.

## அடையாளம் காணப்பட்ட அச்சுறுத்தல்கள்

- கரையோர உட்கட்டமைப்பு
- காலநிலை மாற்றம்
- சட்டவிரோத மீன்பிடி
- வாழிடங்கள் அழிக்கப்படல் மற்றும் துண்டடப்படல்
- சுற்றுலா
- மாசுக்கள்
- மேலதிக விவசாய நீர் வடிந்தோடல்

## நாங்கள் செய்தவை

கடல் நாட்டுப் பங்காண்மை நிகழ்ச்சித்திட்டத்தில், புளூ றிசோசஸ் ட்ரஸ்ட் (Blue Resources Trust) அமைப்பு இலங்கை வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன இணைந்து ஹிக்கடுவ தேசிய பூங்காவின் முகாமைத்துவத்தை மதிப்பீடு செய்தன. இந்த மதிப்பீட்டுக்காக, கிடைக்கும் சான்றுகள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் கூட்டங்கள் மற்றும் ஜனவரி 23, 2025 அன்று நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை என்பவற்றில் 15 உள்ளூர் பங்குதாரர்களின் ஈடுபாடும் பெற்றுக்கொள்ளப்பட்டது. முகாமைத்துவத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்படும் அம்சங்கள் மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்தக் கூடிய முக்கிய செயற்பாடுகள் என்பவற்றை நாம் அடையாளம் கண்டோம்.

## தொடர்புடைய தரப்புகள்

மதிப்பாய்வில் ஈடுபட்டுள்ள துறைகள்:

- அரசாங்கம்
- NGOக்கள்
- உள்ளூர் மீனவர்கள்
- உள்ளூர் சுற்றுலாத்துறை



- 1979 ஆம் ஆண்டு கடல் சரணாலயமாக ஆக்கப்பட்டது
- 1988 ஆம் ஆண்டு ஒரு பாதுகாக்கப்பட்ட இயற்கைத் தலமாக தரமுயர்த்தப்பட்டது
- 2002 ஆம் ஆண்டு ஒரு கடல் தேசிய பூங்காவாக தரமுயர்த்தப்பட்டது. இது தாவர விலங்கு கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 469) கீழ் இடம்பெற்றது.

**1.02 km² / 102 ha**

| வாழிடங்கள் / இனங்கள் | நிலை | போக்கு |
| --- | --- | --- |
| முருகைக் கற்கள் | மோசமானது | சிதைவடைகிறது |
| கடல் புல் படுக்கைகள் | சாதாரணமானது | சிதைவடைகிறது |
| மணல் கரையோரம் | மோசமானது | சிதைவடைகிறது |
| கடல் தாவர வாழிடங்கள் | சிறந்தது | திடமானது |
| பச்சை கடலாமை | சாதாரணமானது | திடமானது |
| கறுப்பு முனை முருகைக்கல் சுறா | மோசமானது | சிதைவடைகிறது |



## பாதுகாக்கப்பட்ட பகுதியின் முகாமைத்துவ செயல்திறன் பற்றிய மதிப்பாய்வு

ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதி நியமிக்கப்பட்டவுடன், அது எவ்வளவு சிறப்பாக நிர்வகிக்கப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். முகாமைத்துவ செயல்திறனை மதிப்பிடுவதற்கு பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படலாம். பயன்படுத்தப்படும் மிகவும் பொதுவான முறைகளில் ஒன்று முகாமைத்துவ செயல்திறன் கண்காணிப்பு கருவி (METT-4). இது ஐந்து முகாமைத்துவ கருப்பொருள்களை அடிப்படையாகக் கொண்ட 38 கேள்விகளுக்கு பதிலளிப்பதை உள்ளடக்கியது:

**திட்டமிடல்**
பாதுகாக்கப்பட்ட பகுதி சட்டம், வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் ஆகியவற்றின் மதிப்பீடு.

**உள்ளீடுகள்**
வளங்களின் மதிப்பீடு: பணியாளர்கள், நிதியறிக்கை, உபகரணங்கள் மற்றும் வசதிகள்.


**செயல்முறை**
முகாமைத்துவம் நடாத்தப்படும் விதத்தின் மதிப்பீடு.

**வெளியீடுகள்**
முகாமைத்துவ நடவடிக்கைகளை செயல்படுத்துதல்; தயாரிப்புகள்/சேவைகளை வழங்குதல் ஆகியவற்றின் மதிப்பீடு.

**விளைவுகள்**
பாதுகாக்கப்பட்ட பகுதியின் இலக்குகள் அடையப்பட்ட அளவு மதிப்பீடு.

### ஒரு முகாமைத்துவக் கூறுக்கான METT மதிப்பெண்



## முக்கிய வெற்றிகள்

1. தாவர மற்றும் விலங்குகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் 1979 ஆம் ஆண்டு தொடக்கம் இப்பிரதேசத்துக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு காணப்படுகின்றது, அச்சட்டத்தில் மீன்பிடி, வேட்டையாடுதல் மற்றும் வள அகழ்வு போன்ற தெளிவாக வரையறுக்கப்பட்ட தீங்கான நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

2. முருகைக்கல் சூழற்தொகுதிகள் மற்றும் கடல் உயிர்ப் பல்வகைத்தன்மை என்பவற்றைப் பாதுகாப்பதற்கான உடன்பாடு காணப்பட்ட பாதுகாப்பு குறிக்கோள்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு சுற்றுலா அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் சூழல் ஒழுங்குவிதிகள் அமுலாக்கம் போன்ற செயற்பாடுகள் ஆதரவளிக்கின்றன.

3. அந்த இடத்தில் குறித்தொதுக்கப்பட்ட ஒரு DWC அலுவலகம் செயற்படுகின்றது, இது கண்காணிப்பு, அமுலாக்கல் மற்றும் ஏனைய முகவரமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு என்பவற்றுக்கு உதவியாக அமைகின்றது.

4. நிலைபேறான சுற்றுலா மூலம் குறிப்பிடத்தக்க அளவு உள்ளூர் வருமானம் ஈட்டப்படுகின்றது. மேலும், அனுமதிப்பத்திரம் வழங்கல், விழிப்புணர்வூட்டல், முருகைக்கல் மீளுருவாக்கம், மற்றும் கரையோர சுத்தம் செய்தல் என்பவற்றில் சமூகம் ஈடுபாடு கொண்டுள்ளது.

5. ஹிக்கடுவ நகரத் திட்டம் மற்றும் விசேட பிரதேச முகாமைத்துவக் குழு உள்ளடங்கலாக ஒத்துழைப்பு மிக்க திட்டமிடல் முன்னெடுப்புகள் அபிவிருத்தியுடன் பாதுகாப்பை ஒருங்கிணைக்கவும் முன்மொழியப்பட்டுள்ள பாதகாக்கப்பட்ட பிரதேச விரிவாக்கத்துக்கும் உதவுகின்றன.

## முகாமைத்துவத்தினை மேம்படுத்தும் முக்கிய நடவடிக்கைகள்

- தெளிவான பாதுகாப்பு குறிக்கோள்கள், உரிய நேர நடவடிக்கைகள், பொறுப்புகள், பாதீடுகள், மற்றும் கண்காணிப்பு குறிகாட்டிகளுடன் புத்தி சாதுரியம் மிக்க ஒரு முகாமைத்துவத் திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்தல்.
- DWC பணியாளர்களுக்கு உதவுவதன் மூலம் அமுலாக்கத்தை வலுப்படுத்தல் மற்றும் கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு படையின் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்க அவற்றுடன் ஒத்துழைப்பாக செயற்படல்.
- வலயமாக்கல், கொள்ளளவு இயலுமைகள், சூழல் சான்றழித்தல், பார்வையாளர் கல்வி, மற்றும் முருகைக்கல் மீதான அழுத்தத்தை குறைப்பதற்காக மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு என்பவற்றின் ஊடாக சுற்றுலாவை ஒழுங்குபடுத்தல்.
- ஏற்ற வகையில் மாற்றியமைக்க முடியுமான முகாமைத்துவத்துக்கு ஆதரவளிக்க தொடர்ச்சியான சூழற்தொகுதி மதிப்பீடுகள் மற்றும் ஆய்வு முறைமைகளைக் கொண்ட மையமாக்கப்பட்ட ஒரு கண்காணிப்பை உருவாக்குதல்.
- நீண்ட கால நிலைபேற்றுத்தன்மைக்காக உள்ளூர் சமூகங்கள், பங்குதாரர் அறிவுரைக் குழுக்கள், மற்றும் அரச — தனியார் பங்காண்மைகள் மூலமாக உள்வாங்கும் மற்றும் ஒத்துழைப்பு மிக்க ஆளுகையை வளர்த்தல்.

## அடுத்த நடவடிக்கைகள்

வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் இந்த மதிப்பீட்டின் முடிவுகளை எதிர்காலத்திற்கான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தும்